செய்தி வெளியீட்டு எண்.77 **தேதி: 24.1.2011**

# கூவம் சீரமைப்பு மற்றும் உயர்மட்ட விரைவு சாலை – திட்ட களப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

கூவம் சீரமைப்பு திட்டப் பணி மற்றும் சென்னை துறைமுகம் – மதுரவாயல் வரை உயர்மட்ட விரைவு சாலைப் பணிகளுக்காக கூவம் கரையோரப் பகுதி மற்றும் இதரப் பகுதிகளில் வசிக்கும் குடிசைவாழ் மக்கள் ஆட்டோ மற்றும் வாகன உதிரிப்பாக விற்பனையில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு மாற்று வசிப்பிடம் மற்றும் தொழிற்கூடம் அமைத்திடும் வகையில் சென்னை அருகே ஆப்பூர் மற்றும் பெருமாள்தாங்கல் கிராமங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகளை 324 குடும்பங்களுக்கு இன்று (24.1.2011) புதிய தலைமைச் செயலகத்தில் முதல் நிகழ்ச்சியாக மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

சென்னை துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை உயர்மட்ட விரைவு சாலை அமைக்கும் திட்ட பணிகளுக்கு அரசாணை எண்.63, நெடுஞ்சாலைத் துறை நாள்– 07.03.2008ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது, இத்திட்ட களப்பகுதிகளில் வாழும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் இத்திட்ட களபகுதிகளில் வாழும் குடும்பங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இக்குடும்பங்களுக்கு விரைவில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்படுவார்கள். மேலும் இத்திட்ட களப்பகுதியில் வாழும் 458 குடும்பங்கள் மோட்டார் வாகன உதிரிபாகங்கள், பழுது பார்த்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற பணிகளை தங்களது வாழ்வாதார பணிகளாக மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்கள் தங்களையும் மற்றும் அதே பகுதியில் அருகே இதுபோன்று வியாபாரம் செய்து வரும் அனைவரையும் சென்னைக்கு அருகே ஒரே

இடத்தில் குடியமர்த்த கேட்டுக் கொண்டுள்ளனர். அதற்கிணங்க சென்னைக்கு அருகே ஆப்பூர் மற்றும் பெருமாள்தாங்கல் கிராமங்களில் 1657 மேம்படுத்தப்பட்ட மனைகள் ரூ.11.39 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது சென்னை உயர்மட்ட விரைவு சாலை திட்ட களப்பகுதிகளில் திட்டப்பணிகளால் பாதிக்கப்படும் 324 குடும்பங்களுக்கு ஆப்பூர் மற்றும் பெருமாள்தாங்கல் திட்டப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட மனைகளுள் 300 சதுர அடி கொண்ட மேம்படுத்தப்பட்ட மனைகளை கிரயமின்றி ஒதுக்கீடு செய்ய வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மனைகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை முதற்கட்டமாக 324 குடும்பங்களுக்கு இன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

**பணி நியமன ஆணை வழங்குதல்**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் சென்னையில் காலியாக இருந்த பணவசூலாளர்கள், தட்டச்சர் பணியிடங்களை நிரப்ப சென்னை வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல்கள் பெற்று, தகுதி மற்றும் திறன் அடிப்படையில் கீழே கூறப்பட்டுள்ள பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

| வ.எண் | வகுப்பினர் | பணவசூலாளர் | தட்டச்சர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 2 | 6 | 8 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 1 | 1 | 2 |
| 3. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 11 | 6 | 17 |
| 4. | இதர வகுப்பினர் | – | – | – |
| | **மொத்தம்** | **14** | **13** | **27** |

இதில் 12 மகளிரும், 15 ஆடவரும் அடங்குவர். மேலே குறிப்பிட்ட வகுப்பினரில் முன்னுரிமை வழங்கப்பட்ட இனங்களில் 8 கலப்பு திருமணம் செய்து கொண்டவர்கள், 1 ஆதரவற்ற விதவை மற்றும் 1 முன்னாள் இராணுவத்தினர் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இந்நியமனங்களுக்கான பணி ஆணைகள் 24.01.2011 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.